International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

இலக்கியப் பிரதிகளில் பெண் பாத்திரங்களின் செயல்பாடுகள்

ச. ரஞ்சிதா
முனைவர்பட்ட ஆய்வாளர்

முனைவர் மோ. மீனாட்சி
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வுத்துறை
தருமபுரம்ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை

ஆய்வின் நோக்கம் - ஆய்வு முறை

தமிழ் இலக்கியங்களில் பெண்கள் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளனர் என்பதையும், காலந்தோறும் அவர்களின் சமூக நிலை, குடும்ப நிலை, கல்வி, தொழில், உரிமை, சமயப் பங்கேற்பு மற்றும் தனிமனித ஆளுமை ஆகியவை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் ஆராய்வதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும். வேதகாலம் தொடங்கி சங்ககாலம், காப்பியக்காலம், இடைக்காலம், நவீன இலக்கியம் வரையிலான காலப் பகுதிகளில் தோன்றிய பெண் பாத்திரங்கள் இவ்வாய்வில் ஒப்பீட்டு நோக்கில் அணுகப் படுகின்றன. இவ்வாய்வில் இலக்கியப் பிரதிகளில் இடம்பெறும் பெண் பாத்திரங்களின் செயல்பாடுகள், அவர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள், அவர்கள்மீது விதிக்கப்படும் சமூகக் கட்டுப்பாடுகள், குடும்பம் மற்றும் சமூகத்தில் அவர்களுக்குரிய இடம் ஆகியவை கருத்தில் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக பெண் ஒரு குடும்ப உறுப்பினராக மட்டுமல்லாமல், சிந்திக்கும் தனிமனிதராகவும், படைப்பாளராகவும், சமூகச் செயல் பாட்டாளராகவும் எவ்வாறு உருவாக்கப்படுகிறாள் என்பதும் ஆராயப்படுகிறது. இதன் மூலம் தமிழ் இலக்கியங்களில் பெண் படிமம் பெற்ற மாற்றங்களை காலவரிசை மற்றும் சமூகப் பார்வையின் அடிப்படையில் விளக்க முயலப்படுகிறது.

ஆய்வுச் சுருக்கம்

இக்கால இலக்கியங்களில் பெண்கள் ஏற்படும் சமூக அவலங்கள் சமுதாய ஏற்றத்தாழ்வுகள் பெண் கல்வி போன்றவற்றினை குறித்த கட்டுரை வழியே ஆராயப்பட்டுள்ளது.

முதன்மைச் சொற்கள்

இலக்கியம், பெண்ணியம், படிமம், பெண்ணுரிமை, கல்வி, சமூக மாற்றம்

முன்னுரை

நம் தமிழ் மொழியின் இருகண்களாக இலக்கியமும், இலக்கணமும் ஆகும் அத்தகைய இலக்கியங்களில் அறக் கருத்துக்களை விளக்கவும் மரபுகளை விவரிப்பதற்கும் பெண்மாந்தரைப் படைப்பதுண்டு.

இலக்கியங்களில் பெண் மாந்தரை

(அ) வேத கால மகளிர் (ஆ) சங்க கால மகளிர் (இ) காப்பிய கால மகளிர் (ஈ) இடைக் கால மகளிர் (உ) புதினங்களும் மகளிரும், என்று கால வரிசையில் பிரித்து பெண்களின் நிலை உணர்த்துவதை இக்கட்டுரையின் வழி காணலாம்.

வேத கால மகளிர்

வேதங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்க ளிலும் பெண்களைப் பற்றி உயர்ந்த கருத்தே நிலவிற்று. ஆண், பெண் உறவு இன்று போல் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாய் நிலவில்லை. மகாபாரதத்தில் பாஞ்சாலி ஐவரை மணந்திருக்கிறாள். கணவனை இழந்த மகளிர்க்கு வியாசரால் திரு தராட்டிரனும் பாண்டுவும் பிறந்தனர். குந்தி தாய்மை அடைந்து கர்ணனையும் பாண்டவர் கள் மூவரையும் பயந்தது பாண்டுவினால் அன்று சந்தனுவின் மனைவியாகிறாள் திருமண உறவில் உரிமை பெற்றிருந்தாலும் அக்காலத்திலும் பெண்கள் உடைமைப் பொருளாக்கிய தருமன் செய்கையால் உணரலாம்.

சீதையின் சுயம்வரமும் தமயந்தியின் சுயம்வரமும் திருமணத்தில் பெண்களுக்கு உள்ள உரிமையைக் காட்டும். தமயந்தி நளனுடைய பிரிவுக்குப் பின்னர் மீண்டும் சுயம்வரத்தில் பங்கு கொண்டமையும் ஒரு பெண் ஆடவர் பலருடன் வாழ்ந்தமையை உணர்த்தும். தமிழகத்திலும் தாய்வழிச் சமுதாயமே நிலவியது பெண்களையே தெய்வங்களாக வழிபட்டனர். இக்காலத்தில் தான் இனக் குழுமக்கள் செழிப்பைப் பெண் தெய்வமாக வழிபட்டுத் தொடங்கினார்கள். தாய்த்தெய்வ வணக்கமும் செழிப்புத் தெய்வ வணக்கமும் தோன்றின. கல்லில் தாய்த் தெய்வங்களையும் செழிப்புத் தெய்வங்க ளையும் செதுக்கினார்கள்.

சங்க இலக்கிய மகளிர்

மனிதர்கள் தொல்காப்பியத்திற்கும் முன்னர் திருமணச் சடங்குகள் இன்றி வாழ்ந்திருக்கக் கூடும்.

பொய்யும்வழுவும்தோன்றியபின்னர்

ஐயர்யாத்தனர்கரணம்என்ப

என்னும் கூற்று இதற்கு அரண் செய்யும்.

பின்னர் எண்வகைத் திருமணம் நடை பெற்றிருக்கலாம். பெண்கள் தமக்குரிய துணையைத் தாமே தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தனர். எனினும் தம்முடைய காதலைத் தாம் முன்னர் வெளிப்படுத்துவ தில்லை. மூதின்மகளிரைப் பற்றி புறநானூறு கூறினும் பெண்கள் போர்க்களம் சென்று போரிட்டதாகக் குறிப்புகள் இல்லை. களவியல் கற்பியல் இருதிணைகளும் பெண் களின் உரிமை மிகுந்த அகவாழ்க்கையைச் சித்தரித்த போதும் பருவப்பெண்களை முது பெண்டிர் பாதுகாப்பதமையும் இற்செற்ப்பு என்னும் துறையும் பெண்களுக்கு விதிக்கப் பட்ட கட்டுப்பாடுகளை விளக்கும். இருந்தாலும் இருத்ததல் நிமித்தமும் ஊடல் நிமித்தமும் பிரிவின் நிமித்தமும் போன்றவை ஆடவர் அதிகச் செய்யினும் பெண்கள் பொறுப்பது கடன் என்னும் நிலையைச் சுட்டும். கணவன் இறந்த பின்னர் மனைவியர் உடன் இறப்பது தீப்பாய்தல் நிகழ்ந்தன் விதவையர் துயரவாழ்க்கையை மேற்கொண்டு கைம்மை நோன்பு ஏற்றனர்.

பொதுமகளிர் என்றும் பரத்தையர் என்றும் அழைக்கப்பட்ட இருமணப் பெண்டிர் சங்ககாலத்தில் வாழ்ந்தார்கள் பெண்கள் அமைச்சர் தூதுவர் படைத்தலைவர் போன்ற உயரிய தொழிலில் இருந்ததாகக் குறிப்புகள் இல்லை. ஔவையார் தூது சென்றமை தனிப்பட்ட முறையில் நிகழ்ந்ததாகும். தூதுவர் என்னும் பணி முறையில் அவர் செல்லவில்லை கடைசியர் என்று அழைக்கப் படும் பெண்கள் விவசாயப் பணி புரிந்தனர். பெண்பாற் புலவர் வாழ்ந்த போதும் குல மகளிர் கல்விச் சாலையிலோ பயின்றதா கவோ அடிப்படைக் கல்வி அறிவு பெற்றிருந்ததாகவோ குறிப்புகள் இல்லை அரசமகளிரும் விறலியரும் கல்வியறிவு பெற்றிருந்தனர். எனினும் சங்க கால மகளிர் அடிமைநிலை இன்றி உரிமையுடன் வாழ்ந்தனர் என்றே கூறலாம். சங்ககால இலக்கியங்களில் ஆண்களை விடவும் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்று பிழையான எண்ணம் சொல்லப்படவில்லை. என்று திரு.ம.பொ.சிவஞானம் கூறும் கூற்று கருதற்குரியது.

சங்ககாலப் பெண்களின் கல்வியும் பொருளாதாரப் பங்களிப்பும்

சங்க இலக்கியங்களில் பெண்களின் வாழ்க்கை காதல் மற்றும் குடும்ப உறவு களுடன் மட்டுமே தொடர்புபடுத்தப் படவில்லை. அவர்களின் அறிவாற்றல், தொழில், சமூகப்பங்கேற்பு மற்றும் இலக்கியப் புலமை ஆகியவற்றுக்கும் குறிப்புகள் காணப் படுகின்றன. பெண்பாற் புலவர்கள் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றிருப்பது பெண் களின் அறிவாற்றலுக்கும் படைப்பாற்றலுக்கும் முக்கியச் சான்றாக அமைகிறது. ஔவையார் போன்ற பெண்பாற்புலவர்கள் அரசர்களுடன் உரையாடியதோடு, அறிவுரை கூறும் நிலைக்கும் உயர்ந்துள்ளனர்.

பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பும் சங்க இலக்கியங்களில் வெளிப்படுகிறது. விவசாயப் பணிகளில் ஈடுபட்ட பெண்கள் 'கடைசியர்' என அழைக்கப்பட்டதாக இக்கட்டுரை குறிப்பிடுகிறது. இதன் மூலம் பெண்களின் வாழ்க்கை குடும்பஎல்லைக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்படாமல் உழைப்பு மற்றும் உற்பத்திச் செயல்பாடுகளுடனும் தொடர்புடையதாக இருந்ததை அறிய முடிகிறது. அதேவேளையில் குலமகளிரின் கல்வி குறித்த நேரடியான குறிப்புகள் குறைவாக இருப்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே சங்ககாலப் பெண்களின் நிலையை ஒரே மாதிரியான தாகக் கருதாமல், சமூக நிலை, தொழில், குடும்பப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபடுத்திப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

காப்பிய மகளிர்

காப்பிய மகளிர் காலத்தில் பெண்களின் நிலையில் பெரும்மாற்றம் இல்லை காப்பிய காலத்திலும் மகளிர் கணவன் இறந்தவுடன் தீபுகுந்தனர் என்பதை மணிமேகலை காப்பி யத்தில் ஆதிரையின் மூலம் உணரலாம். விதவையர் வாழ்விலும் முன்னேற்றம் இல்லை பெண்கள் சமயவாழ்விலும் பங்கேற்றனர் என்பதை மாதவி மணிமேகலை கவுந்தி யடிகள் போன்ற பாத்திரங்களால் உணரலாம். பெண்கள் கணவரை தெய்வமாக தொழுதனர் கணவரை அன்றி கடவுளரை வழிபடவில்லை. கற்புடை மகளிர் தெய்வமாக்கப்பட்டு கற்பு என்னும் சொல்லை புனிதமாக போற்றுவது காப்பிய காலத்தில் வழி வடைந்தது.

காப்பியங்களில் பெண்ணின் தன்னிலை உணர்வு

காப்பிய இலக்கியங்களில் பெண் பாத்திரங்கள் ஒரே தன்மையுடையவர்களாகப் படைக்கப்படவில்லை. கண்ணகி, மாதவி, மணிமேகலை, கவுந்தியடிகள் போன்ற பெண் பாத்திரங்கள் வெவ்வேறு வாழ்க்கைத் தேர்வுகளையும் மதிப்புகளையும் பிரதிநிதித் துவப்படுத்துகின்றன. கண்ணகி குடும்ப வாழ்க்கையிலிருந்து நீதிக்கான போராட்டத்தை நோக்கிச் செல்கிறாள். மாதவி கலை வாழ்க்கையையும் தனித்துவமான வாழ்வியல் அனுபவத்தையும் வெளிப்படுத்துகிறாள். மணிமேகலை துறவு மற்றும் சமயச் சிந்தனையைத் தேர்ந்தெடுக்கிறாள். கவுந்தி யடிகள் சமய மற்றும் ஆன்மிகப் பங்கேற்பின் வழியாக தனித்துவமான இடத்தைப் பெறுகிறார்.

இதனால் காப்பியங்களில் பெண்ணின் வாழ்க்கை கணவனை மையமாகக் கொண்ட குடும்ப வாழ்க்கையால் மட்டுமே வரையறுக்கப் படவில்லை என்பதை அறிய முடிகிறது. பெண்ணின் தனிப்பட்ட முடிவு, அற உணர்வு, எதிர்ப்புணர்வு, சமயத் தேர்வு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவையும் பெண் பாத்திரங்களின் வழியாக வெளிப் படுகின்றன. எனவே காப்பியப் பெண்களைப் பெண்ணியப்பார்வையிலும் ஆராய்வதற்கான வாய்ப்பு காணப்படுகிறது.

இடைக் கால இலக்கியங்கள்

இடைக்கால இலக்கியங்கள் பெண் மாந்தருக்கு குறிப்பிடத் தகுந்த இடமளிக்க வில்லை ஆண்டவனையும் அரசனையும் புகழ்ந்து எழுத பெண்களை இழிவாகச் சித்தரித்தன உலா, பாள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்களில் உடமைப் பொருளாகவே பெண் மாந்தர் மதிக்கப் பட்டனர். பெண்களின் வயது பருவம் அழகு இவை வருணிக்கப்பட்டன. பெண்களின் செயலாற்றல் அறிவுத்திறன் இவற்றை விரிவாக்காமல் பக்தி ஆண்டவன் திறன் அரசனின் புகழ் இவற்றுக்கே முதன்மையிடம் அளிக்கப்பட்டன.

இடைக்கால இலக்கியங்களில் பெண் படிமம்

இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் பெண் பாத்திரங்களின் படைப்பு பெரும்பாலும் அக்காலச் சமய, சமூக மற்றும் ஆணாதிக்கக் கட்டமைப்புகளுடன் தொடர்புடையதாகக் காணப்படுகிறது. உலா, பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கிய வகைகளில் பெண்ணின் அழகு, வயது, பருவம், காதல் மற்றும் குடும்பத் தொடர்புகள் விரிவாகச் சித்தரிக்கப் படுகின்றன. இவ்வகைப் படைப்புகளில் பெண்ணின் அறிவுத்திறன் மற்றும் தனித்துவமான செயலாற்றலைவிட அவளது உடலழகு மற்றும் ஆணுடனான உறவு முன்னிலைப் படுத்தப்படும் நிலை காணப் படுகிறது.

இத்தகைய இலக்கியப் படைப்புகளை அந்தந்த காலத்தின் சமூகப் பின்னணியோடு இணைத்துப் பார்ப்பது அவசியமாகும். பெண் எவ்வாறு பார்க்கப்பட்டாள் என்பது மட்டுமல்லாமல், யாருடைய பார்வையில் பெண் உருவாக்கப்பட்டாள் என்பதும் முக்கியமான ஆய்வுக்கேள்வியாகிறது. இதன் மூலம் இலக்கியத்தில் உருவாக்கப்படும் பெண் படிமத்திற்கும் சமூகத்தில் நிலவிய பெண்ணின் உண்மை வாழ்க்கைக்கும் இடையிலான வேறுபாடுகளையும் ஆராய முடியும். எனவே இடைக்கால இலக்கியங் களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை வெறுமனே பெண் இழிவுபடுத்தப்பட்டாள் என்ற ஒற்றைக் கருத்தில் அணுகாமல், சமயம், கலை, சமூக அமைப்பு, ஆணாதிக்கம் மற்றும் இலக்கிய மரபு ஆகிய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அணுகுதல் பொருத்தமானதாகும்.

புதினங்களும் மகளிரும்

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பெண்ணுரிமை பற்றியும் பெண்விடுதலையை யும் அறிஞர்கள் பேசியும் எழுதியும் உள்ளனர் எனினும் இந்தியாவில் பெண் விடுதலை இன்னும் முழுமையாக மலர வில்லை இருபதாம் நூற்றாண்டில் எழுந்த சமூக புதினங்கள் ஓரளவு பெண் விடுதலை பற்றி சிந்திக்க தூண்டின மாறி வரும் சமுதாயத்தில் பெண்களின் பங்கு குறிப்பிட தகுந்ததாய் விளங்குகிறது. புதினங்கள் படைக்கப் பட்ட ஆரம்பகாலத்தில் நற்பண்பு கள் கொண்ட தலைவியரைக் கொண்டிருந் தன கணவனை வழிபடும் குடும்பத் தலைவி குழந்தைகளையும் குடும்பத்தையும் கவனித்துக் கொள்ளும்தாய் ஆகியோரே கதைத் தலைவியராகப் படைக்கப்பட்டனரே யன்றி தனித்து ஒருநிறுவனத்தை நடத்திச் செல்லும் நிர்வாகத் திறமை மிகுந்த தலைவியர் ஆளுமையுடைய மகளிர் படைக்க வில்லை. இந்தியவிடுதலையுடன் பெண் விடுதலையும் அறிஞர் பலரால் வலிறுத்தப் பட்ட நிலையில் படைப்பிலக்கியங்களில் பெண்மாந்தர் உரிய இடம் பெறலாயினர். விடுதலைப் போராட்டத்தில் மகளிர் பலர் பங்கு கொண்டனர். விடுதலைப் போராட்டத்தை விவரிக்கும் கதைகளில் பெண் மாந்தர் ஆற்றல் உள்ளவர்களாகப் படைக்கப் பட்டனர் மாறுகின்ற சமுதாயத்தில் உரிய பங்கும் இடமும் அளிக்கப்படுமானால் பெண்ணைவிட மாபெரும் சக்தி இல்லை என்பதைச் சமுதாயம் கண்கூடாகக் காணும் நிலை தோன்றியது. இந்த நூற்றாண்டின் இடைக்காலத்தில் பெண்ணுக்கும் தனித் திறமைகள் உண்டு என்பதைச் சமுதாயம் ஒப்புக்கொண்டது. அதற்கேற்ப புதினங்கள் எழுந்தன சமூகப் புதினங்களில் மாந்தர் அறிவுத் திறம் மிகுந்தவர்களாகப் படைக்கப்பட்டனர். நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் பெண்மாந்தரைப் படைப்பதில் ஒருதேக்க நிலை ஏற்பட்டது குடும்பத் தலைவி விவரிக்கும் சமூகப் புதுனங்களில் பலதுயரங்களுக்கு உட்பட்ட தலைவி இறுதியில் தன் பொறுமையால் நல்வாழ்வு எய்துவதாகப் புதினங்கள் படைக்கப்பட்டன. லய்சுமி (பு.பெ) வை.மு. கோதை நாயகி அம்மாள் போன்ற எழுத்தாளர் இம்முறையிலேயே புதினங்கள் படைத்தனர்.

லட்சுமி (பு.பெ) எழுதிய பண்ணையார் மகன் காஞ்சனையின் கனவு போன்ற புதினங்களில் அழகும் அடக்கமும் நிறைந்த பெண்மாந்தர் படைக்கப்பட்டனர். தன் காதலனை அடைவதற்காவோ குடும்பத்தி னரிடையே நற்பெயர் வாங்குவதற்காகவோ அவர் போராடுவதே கதைக் கருவாயிற்று.

மனித இயல்புக்கு ஏற்ப நிறை குறை நிறைந்த பெண்மாந்தரைப் படைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜெயகாந்தன் மாற்றங்கள்

சமுதாயத்தில் நிகவதற்கு ஏற்பதம் பாத்திரங்களைப் படைக்கிறார் சமுதாய மாற்றங்கள் நிகழா திருப்பின் பரிதாபத்திற் குரிய ஒர் ஆத்மாவாகவே பெண் இப்போதும் படைக்கபட்டிருப்பாள் நடைமுறை உலகிலும் பெண் தாழ்ந்த பிறவியாகவே கருதப் பட்டிருப்பாள் சமுதாயமாற்றம் பெண்களை மட்டுமல்ல ஆண்களையும் பெண் உதவி பற்றிச் சிந்திக்கத் தூண்டியது பெண்களின் துயரங்களைப் பிரிவோடு கண்டு உரிய கண்ணோட்டத்துடன் பெண்மாந்தரைப் படைத்துள்ளார் ஜெயகாந்தன். ஒரு ஆண் சமுதாயமாற்றத்திற்கு காரணமாக இருக்கும் போது அவன் சந்திக்கும் சிக்கல்கள் ஒருவகை அவனை ஆதரிக்க சிலர் இருப்பார் ஆனால் ஒரு பெண் மரபு வழிபட்ட சமுதாயத்தின் பாதையில் இருந்து மாறுபட்டு நடப்பவள் ஆகி அவள் சந்திக்கும் சிக்கல்கள் வேறுவகையானவை அத்தகைய ஒரு பெண் பாத்திரமாக உருவெடுக்கும் போது அவளை சுற்றிநடையோடும் புதினமும் மாறுபட்டதாய் அமைகிறது ஜெயகாந்தனின்கங்கா (சி.நே) இவ்வகையைச் சேர்ந்தவள்.

முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் பெண்ணின் படிமம் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ளது. தொடக்ககால இலக்கியங்களில் குடும்பம், திருமணம், கற்பு, தாய்மை போன்ற பண்புகளுடன் பெண் இணைக்கப் பட்டிருந்தாலும், சங்க இலக்கியங்களில் பெண்பாற் புலமை, காதல் உணர்வு, உழைப்பு மற்றும் சமூகப் பங்கேற்பு போன்ற பல்வேறு பரிமாணங்கள் வெளிப்படுகின்றன. காப்பியங்களில் கண்ணகி, மாதவி, மணிமேகலை, கவுந்தியடிகள் போன்ற பாத்திரங்கள் பெண்ணின் அறம், கலை, துறவு, நீதி மற்றும் தனித்துவமான ஆளுமையை வெளிப்படுத்துகின்றன.

இடைக்கால இலக்கியங்களில் பெண் படிமம் சமயம், கலை மற்றும் ஆணாதிக்கச் சமூகப் பார்வையுடன் நெருக்கமாகத் தொடர்புடைய தாகக் காணப்படுகிறது. நவீன காலத்தில் கல்வி, சமூகமாற்றம், பெண்ணியச் சிந்தனை மற்றும் தனிமனித உரிமை ஆகியவற்றின் தாக்கத்தால் பெண் பாத்திரங்களின் உருவாக்கத்தில் புதிய பரிமாணங்கள் தோன்றின. குடும்பத் தலைவி என்ற நிலையைத் தாண்டி, சமூக மாற்றத்தில் பங்கேற்கும், தன் வாழ்க்கையைத் தானே தீர்மானிக்க விரும்பும் தனிமனிதராகப் பெண் இலக்கியத்தில் உருவெடுக்கிறாள். எனவே தமிழ் இலக்கியத்தில் பெண்ணின் பயணம் என்பது ஒரே நேர்கோட்டில் நிகழ்ந்த முன்னேற்றமாகக் கருதப்பட முடியாது. ஒவ்வொரு காலத்திலும் உரிமையும் கட்டுப் பாடும், வாய்ப்பும் தடையும், மரபும் மாற்றமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. இதனை உணர்ந்து இலக்கியங்களில் உருவாக்கப்பட்ட பெண் பாத்திரங்களை வரலாறு, சமூகம், பண்பாடு மற்றும் பெண்ணியச் சிந்தனை ஆகிய பல்வேறு கோணங்களில் ஆராயும்போதுதான் 'பெண்ணுலகம்' பற்றிய முழுமையான புரிதலைப் பெற முடியும்.

துணை நூற்பட்டியல்

1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். தமிழ் இலக்கியம் தொடர்பான ஆய்வு நூல். டிசம்பர், 1981.
2. தொல்காப்பியர். தொல்காப்பியம் – பொருளதிகாரம் – கற்பியல்.
3. தொல்காப்பியர். தொல்காப்பியம் – பொருளதிகாரம் – களவியல் உரை.
4. தொல்காப்பியர். தொல்காப்பியம் – பொருளதிகாரம், நூற்பா 108; கலித்தொகை – குறிஞ்சிக்கலி.
5. குறுந்தொகை, பாடல் 158; அகநானூறு, பாடல் 7.
6. புறநானூறு, பாடல்கள் 246–247.
7. புறநானூறு, பாடல்கள் 25, 92, 250, 261, 280.
8. சிவஞானம், ம.பொ. இலக்கியங்களில் இனவுணர்ச்சி. இன்ப நிலையம்.
9. சாத்தனார். மணிமேகலை, காதைகள் 16, 23, 44, 42, 47.
10. பாரதியார், சுப்பிரமணிய. பாரதியார் கவிதைகள்.